தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 23, திருவள்ளுவர் ஆண்டு–2049

2018 ஜூன் 6, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.”

அன்பு மற்றவர்களிடம் விருப்பம் உடையவராய் வாழும் தன்மையைத் தரும். அதுவே அனைவரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பையும் தரும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

சாலை அமைத்தல்

***12660—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, மேல்சோழங்குப்பத்திலிருந்து ஜமுனாமரத்தூர் ஒன்றியத்திலுள்ள ஆட்டியானூர் வரை வனப் பகுதி வழியாக புதிய சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதி, மேல்சோழங்குப்பத்திலிருந்து ஜமுனாமரத்தூர் ஒன்றியத்திலுள்ள ஆட்டியானூர் வரை வனப் பகுதி வழியாக புதிய சாலை அமைக்க அரசு முன்வருமா என்று கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை வனக் கோட்டத்தில் ஜவ்வாது மலையின் அடிவாரத்தில் உள்ள மேல்சோழங்குப்பம் கிராமத்திலிருந்து 850 மீட்டர் உயரத்தில் ஆட்டியானூர் என்னும் மலைவாழ் கிராமம் அமைந்துள்ளது. இவ்விரு கிராமங்களுக்கும் இடையே சாலை அமைக்க வேண்டுமாயின், வாகனம் ஏறுவதற்கான சாய்வு (Gradiant) *அடிப்படையில் கொண்டை ஊசி வளைவுகளுடன், சுமார் 15 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைக்கப்பட வேண்டும். மேலும், இப்பகுதியில் நன்கு வளர்ந்த, விலை உயர்ந்த மற்றும் அரியவகை மர வகைகள் இயற்கையாக வளர்ந்துள்ளன. எனவே, வன நோக்கமற்ற பிற பணிகளுக்கு வன நிலத்தினை வழங்க வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி, மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும் என்பதால், சாலை அமைப்பதற்கான தக்க கருத்துருவை மத்திய அரசின் இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில் அதன்மீது அனுமதி பெற்று, உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத்தின் ஒப்பற்ற தலைவி, தமிழினத்திற்காக, தமிழ் மொழிக்காக, தமிழன் தன்மானத்தோடு வாழ வேண்டும் என்பதற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்களை சட்டமன்றத்தில் நிறைவேற்றி, ஈரோடு புயலையும், காஞ்சி தென்றலையும், பூக்களுக்குப் புன்னகையைக் கற்றுக் கொடுத்த பொன்மனச் செம்மலையும் ஓர் உருவில் பெற்ற தாய், தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவந்த மாண்புமிகு தமிழகத்தின் மறைந்த*

2018 ஜூன் 6]

முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்கி, தமிழக 'மக்களின் நலனே எனது நலன்' என்கின்ற இலட்சியக் கனவோடு ஏழை எளியோர் ஏற்றம் பெற எண்ணிலடங்கா திட்டங்கள் தந்து,

'போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரி
தூற்றுவோர் தூற்றட்டும்,
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன், அஞ்சேன்'

என்கின்ற வைர வரிகளுக்கு ஏற்ப, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் போதிய நிதி இல்லாதபட்சத்தில், கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ஜமுனாமரத்தூர் பகுதியில் ஏற்கெனவே வனப் பகுதியில் வனத் துறையின் உரிய அனுமதி பெற்று, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை, உறுதி திட்டத்தின்மூலம் பல்வேறு சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல, மேற்கண்ட இந்தச் சாலைக்கும், துறைமூலம் முறையாக விண்ணப்பம் செய்து, இந்தத் திட்டத்தின்கீழ் உரிய நிதியைப் பெற்றுத் தந்தால், வனத் துறையின்மூலம் மத்திய அரசிடம் சாலை அமைக்க உரிய அனுமதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமோ அல்லது ஏனைய துறைகள் மூலமோ நிதி ஆதாரத்தினைப் பெற்றுத் தரும்பட்சத்தில் சாலை அமைக்க வனத் துறை அனுமதி அளிக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வி கேட்டுள்ளார்கள்.

முற்பகல் 10-05

வன நிலத்தை வன நோக்கமற்ற பிற பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும் எனில், நிதி ஆதாரம் இருந்தாலும், வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, மத்திய அரசிடம் இணையதளத்தின்மூலம் உரிய கருத்துருவைப் பதிவு செய்ய வேண்டும். எனவே, சாலை அமைக்க முன்வரும் துறை, user agency, *நெறிமுறைப்படி விண்ணப்பிக்கும்பட்சத்தில், அதற்குரிய அனுமதியை வனத் துறை பெற்றுத் தரும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து உரிய அனுமதி பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, போளூரிலிருந்து ஜமுனாமரத்தூர் செல்லும் சாலையிலிருந்து பிரிந்து, கீழூர், மேலூர் வழியாக செண்பகத்தோப்பு வரை, ஏற்கெனவே வனத் துறையின் உரிய அனுமதி பெற்று, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தச் சாலையை சுமார் 8 கி.மீ. நீளத்திற்கு செண்பகத்தோப்பு அணைக்கட்டு வரை நீட்டித்து, அந்தப் பகுதியில் சாலை அமைப்பதற்கு மத்திய அரசிடமிருந்து உரிய அனுமதியைப் பெற்றுத் தர வேண்டும் என்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி மத்திய அரசின் இணையதளம் மூலமாகக் கருத்துருவினைப் பதிவுசெய்து, ஏற்கெனவே வழங்கப்பட்ட பாதைகள் போக, மீதம் இருக்கின்ற பாதைகளுக்கு* user agency *விண்ணப்பித்தால் உரிய அனுமதியை வனத் துறை பெற்றுத் தரும் என்ற விவரத்தினை மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2018 ஜூன் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதிக்குட்பட்ட சித்தாமூர் ஒன்றியத்தில், போரூர்-விளாங்காடு சாலையானது சுமார் 750 மீட்டர் கொழுத்தநல்லூர் வனப் பகுதியை ஒட்டிய சாலையாகும். இந்தச் சாலை சற்றேறக்குறைய 20 ஆண்டு காலமாக சீரமைக்கப்படாததால் நீலாமங்கலம், நீர்பேர், விளாங்காடு, போரூர், கொக்கரந்தாங்கல் போன்ற கிராமங்களுக்குச் செல்லும் சுமார் 5,000 பேர், குறிப்பாக பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும், பணிக்குச் செல்லும் அனைத்து மக்களும் சிரமப்படுகின்ற நிலையில் உள்ளதால், சாலையைச் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் (Ministry of Environment, Forest and Climate Change) துறையினால் வடிவமைக்கப்பட்ட இணையதள முகவரியில் உரிய படிவத்தில் பிரேரணைகளைப் பதிவுசெய்ய வேண்டும். அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் வன நில மாற்றத்திற்கு பிரேரணைகள் செய்யப்பட்ட பணிக்கு, வன நிலம் தவிர பிற நிலங்கள் மேற்காண் பகுதியில் இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து சான்றிதழ் பெறப்பட வேண்டும். உச்ச நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி மாற்றப்படும் வன நிலத்திற்கான நிகர மதிப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். மாற்றப்படும் வன நிலத்திற்கு ஈடாக 2 மடங்கு அளவிலான வனமல்லாத நிலம் வனத் துறையின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வழங்கப்பட வேண்டும். இந்நிலத்தில் தோட்ட உற்பத்தி செய்வதற்கான மதிப்புத் தொகை, 7 முதல் 10 வருட காலத்திற்கான தோட்டப் பராமரிப்புத் தொகையுடன் வனத் துறைக்குச் செலுத்தப்பட வேண்டும். தமிழக அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விகிதப்படி வருடா வருடம் நில குத்தகைத்

தொகை வனத் துறைக்குச் செலுத்தப்பட வேண்டும். இந்த 5 conditions மற்றும் பொறுப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய படிவங்களில் இணையதளம் மூலமாக விண்ணப்பித்து அந்தப் பகுதியில் இருக்கின்ற மாவட்ட வனத் துறை அதிகாரிகள் மற்றும் பிற அலுவலர்களைத் தொடர்பு கொண்டால், அவர் கேட்டிருக்கின்ற அந்தக் கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் சாலை அமைப்பது குறித்த எனது கேள்விக்கு, 'செய்து கொடுக்கப்படும்' என்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய கேள்வியைக் கேட்கின்றேன்.

பொள்ளாச்சியிலிருந்து ஆனைமலை சென்று, ஆனைமலையிலிருந்து சேத்துமடை சென்று, அதற்குப் பிறகு டாப்-ஸ்லிப் வனச் சரகத்திற்குள் சென்று, அங்கிருந்து பரம்பிக்குளம் அணை, பெருவாரிப்பள்ளம், பூணக்கிடவு ஆகிய மூன்று அணைகளுக்குச் செல்கின்ற பாதைகள், சர்க்கார்பதி-பவர் ஹவுஸ்-க்குச் செல்லுகின்ற பாதை மற்றும் சர்க்கார்பதி டனல் தொடங்குகின்ற பாதை ஆகிய இவை அனைத்தும் வனப் பகுதிக்குள் உள்ளன. இந்தப் பாதைகளெல்லாம் நீண்ட காலமாகப் புதுப்பிக்கப்படாமல் பழுதடைந்துள்ளன. அவசர காலத்தில் இந்த அணைகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், நம்முடைய பொறியாளர்களும் மற்றும் பொறியாளர்கள் செல்கின்ற வாகனங்களும் மிகவும் சிரமமான சூழ்நிலைகளைச் சந்திக்கின்ற நிலை உள்ளது. இதுகுறித்து நான் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடம் கடிதமும் கொடுத்துள்ளேன். எனவே, தமிழக அரசிடமிருந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிடமிருந்து சிறப்பு நிதி பெற்றோ அல்லது வனத் துறையின் சிறப்பு நிதி மூலமாகவோ முக்கியமான அணைகளுக்கும், மின் உற்பத்தி நிலையங்களுக்கும் செல்கின்ற பாதைகளை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் சீர்படுத்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

2018 ஜூன் 6]

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நீண்டகால அனுபவம் பெற்ற சட்டமன்ற உறுப்பினர். அமைச்சர் பொறுப்பில் இருந்தவர். இப்பொழுது பேரவைத் துணைத் தலைவராக இருந்து வருகிறார். இதுகுறித்த அத்தனை சட்டங்களையும் அறிந்தவர். அவர் ஏற்கெனவே இதுகுறித்து மனு கொடுத்திருக்கிறார். இதற்கு முன்னால் பேசிய கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஊரக வளர்ச்சித் துறை மூலமோ அல்லது ஏனைய துறைகள் மூலமோ நிதியொதுக்கீடு பெறும்பட்சத்தில் சாலை அமைப்பதற்கு அதற்குரிய படிவங்களில் மத்திய அரசின் அனுமதி பெற்றால், வனத் துறைமூலம் நிச்சயமாகச் செய்து தரப்படும் என்கிற உறுதியை மற்ற உறுப்பினர்களுக்குச் சொல்லியதுபோல் அவருக்கும் சொல்கிறேன்.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைக் கருத்திற்கொண்டுதான் நான்கு தினங்களுக்கு முன்னால், 'மலைப் பகுதியில் இருக்கின்ற வனத் துறை சம்பந்தப்பட்ட அத்தனை சாலைப் பிரச்சினைகளையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள், உரிய பணிகள் மேற்கொள்ளப்படும்' என்ற உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அந்த நேரம் இங்கே இருந்தார்கள். எனவே, அந்த உறுதிப்படி மத்திய அரசாங்கத்தின் சட்டத்தின்படி, இணையதளம் மூலமாக சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் அனுமதியைப் பெறுவதற்கு மனுவை மட்டும் விண்ணப்பிக்கச் சொல்லுங்கள். மற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு மாண்புமிகு முதலமைச்சரிடம் நிதியினைப் பெற்று, அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளுக்கு நிதி ஆதாரத்தைப் பொறுத்து நல்லவை செய்யப்படும், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாதுமலை ஒன்றியம், செங்கம் தொகுதி, கலசப்பாக்கம் தொகுதி ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளையும் உள்ளடக்கிய பகுதி. அதிலே மேல்பட்டு கிராமத்திலிருந்து அத்திப்பட்டு கிராமத்திற்கு உள்வழியாக அரசு ஊராட்சி ஒன்றியம் மூலமாக இப்பொழுது ஜல்லி சாலையும், கப்பிச் சாலையும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனை பிரதான சாலையாக அமைக்க வேண்டும். அவற்றுக்கிடையே 42 மிகச் சிறிய மலைக் கிராமங்கள் இருக்கின்றன. நெல்வாய், சின்னகீழ்ப்பட்டு, வாழக்காடு போன்ற 42 மலை கிராமங்களோடு கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் சொன்ன ஆட்டியானூரையும் இணைத்தால் அந்தச் சாலை பிரதான சாலையாக அமையும். இந்த 43 மலைக் கிராம மக்களும், செங்கம் தொகுதி மற்றும் கலசப்பாக்கம் தொகுதி மக்களும் இணைந்து பயன்பெறும் வகையில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு சிறப்பு நிதியை ஒதுக்கி, இந்தச் சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கலசப்பாக்கம் தொகுதியை ஒட்டிய தொகுதி தனது தொகுதி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருக்குச் சொன்ன அதே சட்டங்கள்தான் உங்களுக்கும் பொருந்தும். எனவே, நீங்களும், கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினரும் ஒன்று சேர்ந்து மத்திய அரசுக்கு உரிய கருத்துருவை அனுப்பினால், நிதியினைப் பெறுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி, நிதி ஆதாரங்களுக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமுனாமரத்தூரிலே சாலைகள் அமைக்க வேண்டுமென்று

2018 ஜூன் 6]

15 வருடங்களுக்கு முன்பு அனுமதிக்காக அனுப்பியும்கூட, மத்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைக்காததால், பல்வேறு சாலைகள் அமைக்க முடியாமல் இருக்கின்றன. ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் ஒரு குழுவாகச் சென்று, மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று அப்படிப்பட்ட சாலைகளை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? குறிப்பாக, ஆந்திராவிலிருந்து *ஆம்பூர் வழியாக யானைகள் எங்கள் ஜமுனாமரத்தூர் பகுதியில் நுழைந்து சேதங்களை விளைவிக்கின்றன. யானை வழித்தடங்கள் எல்லாம் பலரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.* தமிழகத்தில் கோவையில் *யானைகள்* இரயிலில் அடிபட்டு இறக்கும் நிலை இருக்கிறது. *அவை எல்லாம் மாறக்கூடிய* வகையில், வெளிநாடுகளில் *கட்டியிருப்பதைப்போல யானைகள்* அடிக்கடி *கடக்கின்ற பகுதிகளில் பாலங்களை அமைத்தால், அந்தப் பாலங்கள் வழியாக யானைகள் சென்றுவிடும்.* வெளிநாடுகளில் *உள்ளதுபோல் வன இலாகா அப்படிப்பட்ட வன பாலங்களை அமைத்து, வன உயிரினங்கள்* accident-ல் இறக்காமல் *இருப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா, யானைகளுடைய எண்ணிக்கையைக் காப்பாற்றுகின்ற வகையிலே, யானை செல்கின்ற இரயில் பாதை, காடுகள் போன்ற வழித்தடங்களில் பாலங்கள் கட்டப்படுமா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. பிச்சாண்டி அவர்கள் இங்கே குறிப்பிட்டிருப்பதுபோல, அவர்களுடைய பகுதியில் யானைகள் அடிபட்ட செய்தியோ அல்லது சமீப காலத்தில் விபத்துகள் நடந்ததாகவோ தகவல் ஒன்றும் இல்லை என்பதைப் பேரவைக்குத் தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.*

முற்பகல் 10-15

இரண்டாவதாக, அதிகமாக நடமாட்டம் உள்ள இடங்களில் யானைகள் வராமல் இருப்பதற்காக அகழிகள் வெட்டுவது, கம்பிகளைக் கட்டுவது போன்ற நடவடிக்கைகள் வனத் துறையின் மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோன்று, மற்ற நாடுகளில் இருப்பதைப் போன்ற

பெரிய பாலங்கள் மற்றும் சப்-வே கட்டி, அதன் மூலமாக யானைகள் செல்வது குறித்த ஆலோசனை, ஏற்கெனவே நம்முடைய பேரவையில் சொல்லப்பட்டு, வனத் துறையினுடைய தலைமை அதிகாரிகள் மற்றும் செயலாளர்களெல்லாம் ஒன்று சேர்ந்து அந்தக் கருத்துருவையும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். எனவே, தற்சமயம் ஒரு சில குறிப்பிட்ட விபத்துகளைத் தவிர, யானைகளுக்கு எந்தப் பாதிப்போ, பிரச்சினையோ இல்லை. கோயம்புத்தூர் பகுதியிலேதான் சில இடங்களில் இரயிலில் அடிபடுவதுபோன்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. இப்போது அதுவும் முற்றிலுமாக தடுக்கப்பட்டிருக்கிறது. வன உயிரினங்களைக் காப்பதற்கு எந்தெந்த வகையில் முயற்சி எடுக்க முடியுமோ, அந்த வகையில் முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு செய்து வருகிறது என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

132—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***7100—திரு. சு. புகழேந்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியம், கிணார் ஊராட்சி, தோட்டநாவல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஒன்றியத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய, கிணார் ஊராட்சி, தோட்டநாவல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால், அது நிறைவேற்றித் தரப்படும்.